# இணைப்பாடவிதானச் செயற்பாடுகளை பாடசாலையில் வினைத்திறனுடன் அபிவிருத்தி செய்தலும் நடைமுறைப்படுத்தலும்

(யாழ்ப்பாணக் கோட்டத்தை சேர்ந்த ஆரம்பப் பாடசாலைகளை தெரிவாகக் கொண்டது)


தர்சினி முத்துராஜா,
விரிவுரையாளர்,
கோப்பாய் ஆசிரியர் கலாசாலை,
கோப்பாய்,
இலங்கை.
dharshi79@yahoo.com

கிருபாசக்தி கருணா,
சிரேஷ்ட விரிவுரையாளர்,
இசைத்தறை,
யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்
இலங்கை.
skaruna67@yahoo.com


## ஆய்வு அறிமுகம்

எந்த ஒரு நாட்டினதும் சமூகத்தினுடைய நடத்தை பண்புத்தரத்தின் ஓர் அளவுகோலாகும். தரமான வாழ்க்கை முறைமை ஒன்றுடன் கூடிய பண்பான சமூகமொன்றை உருவாக்க முடிவது சிறப்பான கல்விச் செயற்பாட்டின் ஊடாக மாத்திரமேயாகும். பாடசாலை என்பது கல்வித்துறையில் மிக முக்கியத்துவம் வாய்ந்த நிறுவனமாகும். பாடசாலைகளில் இடம்பெறுகின்ற செயற்பாடுகள் சிறப்பாக முகாமை செய்யப்படுவதனால் பாடசாலையிலிருந்து வெளிவருகின்ற மாணவர் சமூகம் நாட்டிற்கு பயன்மிக்க ஓர் பகுதியினராக உருவாகின்றனர்.இந்த முக்கிய நோக்கத்தை அடைந்து கொள்வதற்காக பாடசாலைத் தொகுதியின் பண்புத்தர விருத்தியை மையப்படுத்திய கல்வி முகாமைத்துவ செயற்பாடொன்றின் அவசியம் உணரப்படுகிறது.

இலங்கையில் மதிப்பீடுகள் தொடர்பாக வெளியிடப்படுகின்ற விடயங்களை நோக்கும் போது 1950 ஆம்ஆண்டிலிருந்து கல்வி நிறுவனங்களின் மூலம் பாடசாலைகளில் குழுப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டதுடன்,பாடசாலைகளுக்கு அறிவிக்கப்பட்டு பரிசோதனை செய்யப்படுவது போன்றே திடீரென மேற்கொள்ளும் குழுப்பரிசோதனைகளும் நடைபெற்றன. இங்கு பாடசாலைகளில் நடைமுறையிலிருந்த பதிவேடுகளும், அறிக்கைகளும்,ஆசிரியர் கற்பித்தல் போன்றன பரிசோதனைகள் அதிகாரிகளால் பரிசீலீக்கப்பட்டன. அம்மேற்பார்வைமுறையானது உயர்மட்டத்தில் மேற்கொளளப்படுவதனால் பாடசாலைகளிடத்திலும், விசேடமாகஆசிரியர்களிடத்திலும் தெளிவொன்றும் காணப்படவில்லை. அவ்வாறே தனிப்பட்ட வற்புறுத்தல்களுக்குஉள்ளாக்கப்படுவதையும் காணக்கூடியதாக இருந்தது. அநேகமாக “மேற்பார்வை என்பது குறைகளைத்தேடுவதற்கேயாகும்” என்ற மனோபாவத்தை ஆசிரியர்களிடத்திலும் பாடசாலை நிர்வாகத்திலும் ஏற்படுத்தியது.

அதன் பிரகாரம் கல்வியின் குறிக்கோள்கள் பற்றி தெளிவுபடுத்திக் கொள்வதுடன், காலப்போக்கில் ஏற்படும்மாற்றங்களுக்கு ஏற்புடையதான மற்றும் பக்கச்சார்பற்ற முறையொன்றினை கட்டியெழுப்புவதுடன் பொதுவானசான்றுகளை அடிப்படையாகக் கொண்ட மதிப்பீட்டு முறைமையின் தேவை எழுந்ததால் குறைகளைத்தேடுவதைத் தவிர்த்து பாடசாலைகளைப் பலப்படுத்துவதற்கு உதவி புரிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

## கல்வியில் தர உறுதிப்பாடு

பரந்த அடிப்படையில் மாற்றத்திற்குள்ளாகும் சமூகச் சூழலினுள், எதிர்பார்க்கப்படும் நோக்கத்தின்பால் பாடசாலை நடவடிக்கைகள் இடம்பெறுகின்றனவா, முக்கிய எதிர்பார்ப்புகள்

அடையப்படுகின்றனவா என்பதனை இனங்காண்பதற்காக இப்புதிய மதிப்பீட்டு வழிகாட்டல் காலத்துக்கு காலம் இடம்பெற்று வருகின்றன. இந்த புதிய மதிப்பீட்டு வழிகாட்டிக்கு அமைவாக மாணவர் அடைவு, கற்றல் கற்பித்தல் மதிப்பீடு, முறையான கலைத்திட்ட முகாமைத்துவம், பௌதீக வள முகாமைத்துவம், பாடசாலையும் சமூகமும் ஆகிய பிரதான 08 துறைகளின் கீழ் 60 நியதிகளும் 210 சுட்டிகளும் அடையளம் காணப்பட்டுள்ளன.மேற்குறிப்பிடப்பட்டுள்ள நியதிகளின் கீழ் தர ரீதியாகவும், பண்பு ரீதியாகவும், மதிப்பீடுகள் பாடசாலைகளில் இடம்பெறுகின்ற அதேவேளை பண்புத்தரத்தை மேலும் உறுதி செய்யும் பொருட்டு புள்ளியிடல்களும் இடம்பெறுகின்றன.

| இல | முக்கிய துறைகள் |
|---|---|
| 01 | மாணவர் அடைவு |
| 02 | கற்றல் - கற்பித்தல் மதிப்பீடு |
| 03 | முறையான கலைத்திட்ட முகாமைத்துவம் |
| 04 | இணைப்பாடவிதான செயற்பாடுகள் |
| 05 | மாணவர் நலன்புரி |
| 06 | தலைமைத்துவமும் முகாமைத்துவமும் |
| 07 | பௌதீக வள முகாமைத்துவம் |
| 08 | பாடசாலையும் சமூகமும் |

மேலே உள்ள அட்டவணையைக் கருத்தில் கொண்டு கல்வியின் பண்புத்தரத்தை உறுதி செய்வதற்கான மதிப்பீட்டு வேலைத்திட்டத்தின் இணைப்பாடவிதான செயற்பாடுகள் என்பது மற்ற துறைகளை விட விருத்தி செய்ய வேண்டிய நிலையில் உள்ளதைக் காணமுடிகின்றது. எனவே அதனை விருத்தி செய்வதற்கு செய்யப்பட வேண்டிய செயற்பாடுகள், மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் என்ன என்பதை ஆராய்வதற்காக இணைப்பாடவிதான செயற்பாடுகள் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

## ஆய்வுப் பின்னணி

இணைப்பாடவிதானம் என்பது பாடசாலையில் வகுப்பறைக் கற்றலுக்கு அப்பால் மாணவர்களின் உடல், உள, சமூக, வளர்ச்சியை வழங்கக் கூடிய பல வகையான செயற்பாடுகளில் மாணவர்களைப் பங்குபெறச் செய்வதன் மூலம் அவர்களை முழு மனிதனாக்கும் செயற்றிட்டம் என வரையறை செய்யப்பட்டுள்ளது. அதாவது மாணவனின் ஆளுமையை வளர்ப்பதற்காக பாடசாலை நிகழ்ச்சித் திட்டத்தில் கலைத்திட்டத்தோடு இணைந்த மாணவர் முன்னேற்ற செயற்பாடுகள் அனைத்தும் இணைப்பாடவிதானமாகும். இவை வகுப்பறைக் கற்பித்தலுக்கு புறம்பாக வெளியே மேற்கொள்ளப்படுவதனால் இணைக்கலைத்திட்டம் என அழைக்கப்படுகிறது.

இணைப்பாடவிதான செயற்பாட்டில் ஆசிரியர் மிகவும் முக்கியமானவர். ஆசிரியர்கள், மாணவர்களுக்கு பல்வேறு செயற்பாடுகளை வழங்குவதனூடாக மாணவர்களின் ஆற்றலை விருத்தி செய்து கொள்ள முடியும். ஆசிரியர்களின் வழிகாட்டல்களின் மூலம் புத்தாக்க செயற்பாடுகளை மேற்கொள்ள முடியும். வகுப்பறைக் கல்விச் செயற்பாட்டில் ஈடுபடும் மாணவர்களை ஆய்வுப் பணியிலும் சமூகப்பணிகளிலும் ஈடுபடுத்துவதன் மூலம் செயலார்ந்த அறிவைப் பெற்றுக் கொள்ள முடியும்.

இணைப்பாடவிதான செயற்பாட்டுத் திட்டம் முதன்முதலாக 19ம் நூற்றாண்டில் அமெரிக்க கல்லூரிகளில் ஆரம்பிக்கப்பட்டன. ஆரம்பத்தில் மாணவர் இலக்கிய கழகங்கள், விவாத அரங்குகள் ஆகியவற்றிலும் பின்னர் மாணவர் சங்கங்களிலும் பங்கு கொண்டனர். மாணவர்களின் பூரண ஆளுமையை விருத்தி செய்வதற்காக பாடசாலையில் பல்வேறு இணைப்பாடவிதான செயற்பாடுகள் செயற்படுத்தப்படுகின்றன. பாடசாலையில் மாணவர் தொகை, அதற்கான வளங்கள் பாடசாலை அமைவிடம், பெற்றோரின் தகைமை, வசதி, ஊக்கம், நிறுவனத்தின் தொடர்புகள் சாதகமாகவிருப்பின் இணைக்கலைத்திட்ட செயற்பாடுகளை விளைதிறனுடன் மேற்கொள்ளமுடியும்.

### ஆய்வு நோக்கம்

இப்பாடவிதான செயற்பாடுகள் கல்வியின் முழுமைக்கு வழிகாட்டுகிறது. மாணவர்களிடையே தன்னம்பிக்கை, சுயமதிப்பீடு, பிறரது உணர்வுகளை மதிக்கும் பண்பு, தீர்மானம் எடுக்கும் திறன் உடல் நலம், உள நலம், ஒழுக்க விருத்தி, குடிமைப் பண்பு, வெற்றி தோல்வியை மதிக்கும் பண்பு பண்பாடு விழுமிய வளர்ச்சி, தலைமைத்துவம், ஆளுமை விருத்தி, என்பவற்றுடன் ஆக்கத்திறன் மொழித்திறன் விருத்தி என்பவற்றை வளர்க்கின்றது. அத்துடன் சக மாணவர்களுடன் நட்பை வளர்த்துக் கொள்ளும் பொறுப்புணர்வு,ஈடுபாடு, சமூகக் கடமைகளை ஏற்றுக் கொள்ளவும் இணைப்பாடவிதானம் உதவுகிறது.

### இணைப்பாடவிதான வேலைத்திட்டம்

#### பண்புத்தரம்

மாணவர்களின் சமநிலை ஆளுமை,ஆற்றல், அந்நியோன்னியம்,ஒத்துழைப்பு, விழுமியங்கள்மற்றும் ஆக்கத்திறன்களைவிருத்தி செய்யும் வகையில்இணைப் பாடவிதான செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுதல்.

#### தேவைப்பாடுகள்

- இணைப்பாடவிதான செயற்பாடுகளை திட்டமிட்டு செயற்படுத்துதல்.
- பல்வேறு வேலைத்திட்டங்களின் மூலம் மாணவர்களின் ஆற்றல்களையும் ஆக்கத்திறன்களையும் விருத்தி செய்தல்
- இணைப்பாடவிதான செயற்பாடுகள் மூலம் மாணவர்களிடையே விழுமியங்கள் மற்றும் நற்பண்புடைய தன்மைகளை விருத்தி செய்தல்.


#### நியதிகள்

- முறையான இணைப்பாடவிதான செயற்பாடுகள்
- ஆரம்பப்பிரிவு இணைப்பாடவிதான செயற்பாடுகளை வினைத்திறன் மிக்கதாக செயற்படுத்துதல்
- மாணவர்களின் உடல்விருத்தித்திக்கு பொருத்தமான செயற்பாடுகளுக்கு சந்தர்ப்பங்கள் வழங்குதல்
- மாணவர்களின் உடல்விருத்தித்திக்கு பொருத்தமான செயற்பாடுகளுக்கு சந்தர்ப்பங்கள் வழங்குதல்
- மாணவர்களின் ஆற்றல், ஆக்கத்திறன், ஆளுமை விருத்தி என்பவற்றிற்கு நடவடிக்கை எடுத்தல்
- மாணவர்களுக்கு ஒழுக்க, விழுமிய விருத்தியில் அவதானம் செலுத்துதல்

கலந்துரையாடல், அவதானிப்பிலிருந்து பெறப்பட்ட தகவல் பகுப்பாய்வு

1. சகல வகுப்புக்களிலுமுள்ள மாணவர்களை கவனத்தில் எடுத்து உச்ச பங்களிப்பினை பல்வேறு துறைகளை உள்ளடக்கும் வகையில் முறையான திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதா?


| துலங்கல் | தொகை | வீதம் % |
|---|---|---|
| மிகநன்று | 32 | 59 |
| நன்று | 12 | 22 |
| குறைவு | 10 | 19 |
| மொத்தம் | 54 | 100 |




மாணவர்கள் இணைப்பாட விதான செயற்பாடுகளில் விரும்பி பங்கேற்கின்றனர். இருப்பினும் இவற்றில் பங்குபற்றுவதால் பரீட்சையில் புள்ளிகள் குறைந்து விடுமோ என்ற நிலையிலும் மாணவர்கள் ஆர்வம் குறைவாக காணப்படுகிறது.

2. ஆசிரியர் ஈடுபாடு பாடசாலை மட்டம்


| துலங்கல் | தொகை | வீதம் % |
|---|---|---|
| மிகநன்று | 15 | 65 |
| நன்று | 6 | 26 |
| குறைவு | 2 | 9 |
| மொத்தம் | 23 | 100 |



இதனை நோக்கும்போது பாடசாலை மட்டத்தில் இணைப்பாட விதான செயற்பாட்டில் ஆசிரியர்கள் ஒத்துழைப்பு குறிப்பிட்ட நிலையில் திருப்திகரமாக உள்ளது.

3 பெற்றோர் ஆர்வம்


| துலங்கல் | தொகை | வீதம் % |
|---|---|---|
| மிகநன்று | 18 | 72 |
| நன்று | 7 | 28 |
| குறைவு | 5 | 20 |
| மொத்தம் | 25 | 100 |




பெற்றோர் பரீட்சை மையக் கல்விக்கே அதிக முக்கியத்துவம் கொடுக்கின்றார்கள். சில பெற்றோர்கள் விருப்பம் இருந்தும் தமது நிதி நிலை காரணமாக உடுப்பு, விளையாட்டு உபகரணம் போன்றவற்றிக்கான செலவினை கருத்தில் கொண்டு பின்னிற்கின்றனர். இத்தகைய காரணங்களால் பெற்றோர் பங்களிப்பு குறைவாகக் காணப்படுகிறது.

4. இணைபாடவிதான செயற்பாடு தொடர்பாக விசேட பயிற்சிபெற்ற ஆசிரியர்கள்


| துலங்கல் | தொகை | வீதம் % |
|---|---|---|
| மிகநன்று | 6 | 26 |
| நன்று | 7 | 30 |
| குறைவு | 10 | 43 |
| மொத்தம் | 23 | 100 |



பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் 68மூ மாக காணப்டுகின்ற போதிலும் மாணவர்கள் இணைபாடவிதான செயற்பாட்டில் முழுமையாக வினைத்திறனாக பயிற்சி பெறுதல் திருப்திகரமானதாக காணப்படவில்லை. இதனால் மாணவரது உடல், உள, ஒழுக்க விழுமியங்களை வளர்ப்பதில் குறைபாடு காணப்படுகிறது.

5. இணைப்பாடவிதான செயற்பாடுகளை பாடசாலை மட்டத்தில் மேற்பார்வை செய்யும் முறை


| துலங்கல் | தொகை | வீதம் % |
|---|---|---|
| மிகநன்று | 6 | 21 |
| நன்று | 18 | 64 |
| குறைவு | 4 | 14 |
| மொத்தம் | 28 | 100 |




இணைப்பாடவிதான செயற்பாடுகளில் மேற்பார்வை ஒழுங்குபடுத்தப்பட்ட நியதிகள் அமைக்கப்பட்டு மேற்பார்வை செய்யப்பட வேண்டும். மேற்பார்வை மாணவர்களுக்கு ஊக்கமளிக்கக் கூடியதாக காணப்படவில்லை. மாணவர்களிடத்தே செயலில் வெற்றி, ஆளுமை வளர்ச்சி,ஒழுக்க விழுமிய வளர்ச்சி என்பவற்றில் பாரிய மாற்றத்தினை ஏற்படுத்தலாம்.மற்றும் ஆவணப்படுத்தல்கள் குறைவாகவே காணப்படுகிறது.

6. மாணவர்களுக்கு விசேட பயிற்சிகள் வளவாளர்களைக் கொண்டு நடாத்தப்படல்

| துலங்கல் | தொகை | வீதம் % |
|---|---|---|
| மிகநன்று | 2 | 7 |
| நன்று | 10 | 37 |
| குறைவு | 15 | 56 |
| மொத்தம் | 27 | 100 |



விசேட பயிற்சி வழங்கப்படாமை தொடர்பில் மாணவர்கள் திருப்திகரமான பதிலை வழங்க முன்வரவில்லை.

விமர்சனரீதியான முன்வைப்பு

இணைப்பாடவிதான செயற்பாடுகள் அறிமுகம் செய்யப்படும்போது வழங்கப்படும் உற்சாகம் பயிற்சி என்பன தொடர்ந்து எழுதிசையாக செல்லாமல் குறைவாக காணப்படுகிறது. முதலாவது தோல்வியுடன் முயற்சி நிறுத்தப்படுகிறது. இதற்கு வழங்கப்பட்ட ஆசிரியர்கள் முழுமனதோடு தொடர் பயிற்சி அளிக்க வேண்டும். அடுத்து இணைப்பாடவிதான செயற்பாடுகள் பெறுபேறு மற்றும் கற்றலின் வளர்ச்சியை பாதிப்படையச் செய்யும் என்னும் கருத்து அறியாமை காரணமாக ஏற்பட்டது. எப்போதும் கற்றல் எனும் கருத்து போலியாக ஆழமாக பெற்றோர் மத்தியில் ஆழமாக வேரூன்றியுள்ளது. அடுத்து நவீன ஊக்கல் உத்திகள் என்பன இப்பாடசாலையில் குறைவாகவே காணப்படுகிறது. மாணவர்கள் தமது போட்டிகளின் முழுமைத்தன்மை மற்றும் விதிகளை அறியாமலே போட்டிகளில் 75மூ மானோர் பங்குபற்றுகிறார்கள்.மாணவர்களை தெரிவு செய்யும் போது மாணவர்கள் அனைவரும் பங்கு கொள்ளச்செய்து அதிலிருந்து தெரிவுகள் மேற்காள்ளப்படுவது 52மூமாகக் காணப்படுகிறது. கல்வியிலே சமவாய்ப்பு எல்லோருக்கும் கிடைக்கச் செய்யும்போது இத்தகைய இடர்பாடுகள் நீக்கப்பட வேண்டும்.

மேலும் இணைப்பாட விதானச் செயற்பாட்டினை ஒழுங்கமைக்கும் போது குறிப்பிட்ட ஆசிரியர்கள் மட்டும் ஈடுபடுவதாக அல்லாமல் அவ்வவ் துறைகளில் ஆர்வமுள்ள அனைத்து ஆசிரியர்களுடனும் கலந்தாலோசித்து அவர்களையும் அதில் இணைத்துக் கொள்வதுடன் அவர்களுடைய ஒத்துழைப்பையும் பெற்று நடைமுறைப்படுத்தின் அது நல்ல விளைதிறனை கொடுக்கும் செயற்பாடாக அமையும்.

பாடசாலை சமூகத்தின் உறுப்பினர்கள் என்ற வகையில் மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் ஆகியோரது மனப்பாங்கு, செயற்பாடுகள் போன்றவற்றின் புள்ளிவிபர நிலையினை எடுத்து நோக்கும்போது இணைப்பாடவிதான செயற்பாடுகளளில் பங்குபற்றும் மாணவர்களின் ஆதரவு 65மூ ஆகவும், இணைப்பாடவிதான செயற்பாடுகளில் பங்குபற்ற ஊக்கம் கொடுத்தல் 58மூ ஆகவும் காணப்படுகிறது. ஆசிரியர்கள் இணைப்பாடவிதான செயற்பாடுகளில் முழுமையான ஆதரவினை வழங்குவது 65மூமாக உள்ளது. பாடசாலையில் இணைப்பாடவிதான செயற்பாடுகள் தொடர்பாக வருடாந்த அமுலாக்கல் திட்டம் உள்ளடக்கப்பட்டுள்ளது. இணைப்பாடவிதான செயற்பாடுகள் பற்றிய அறிவும், அதில் முழுமையான மாணவர்களை பங்குகொள்ளச் செய்ய வேண்டும் என்ற ஆர்வமும் 48மூ மாக காணப்படுகின்றது. அதற்கான காரணத்தை நோன்கும் போது கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டில் உயர் மட்டத்தினை மாணவர்கள் அடைய வேண்டும் என்பதை மட்டுமே அதிபர், ஆசிரியர்கள் மேற்பார்வையாளர்கள்( கோட்டம், வலயம், மாகாணம்) கல்வி நிர்வாகிகள் அளுத்தம் கொடுக்கின்றார்கள்.

இணைப்பாடவிதான செயற்பாடுகளில் மேற்மைத்தன்மைக்கு அளுத்தம் மேற்பார்வை செய்வோர் மட்டதிலிருந்து கண்காணிக்கப்படவேண்டும். எனவே இணைப்பாடவிதான செயற்பாடுகளில் ஏற்று கொண்டது 60மூ ஆகவும் செயற்பாடுகள் விருத்தி செய்யவேண்டியது 40மூ ஆகவும் காணப்பட்டது. அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர், மாணவர்கள், இணைந்து செயற்படுவதன் மூலம் மாற்றம் அமைக்கலாம்.

பிள்ளையின் பூரண விருத்திக்கு இணைப்பாடவிதானச் செயற்பாடு இன்றியமையாதது என்பதால் வகுப்பறையில் கற்றல் - கற்பித்தற் செயற்பாட்டுக்குப் புறம்பாக அவற்றோடு இணைந்த வகையில் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளிலும் கூடுதலான அக்கறையை வெளிக்காட்ட வேண்டிய

அதிபர் ஆசிரியர்களது கடமையாகும். ஆயினும் பாடசாலை நேரசூசியில் இதற்கான நேரத்தை ஒதுக்குவதில் இடர்பாடு காணப்பட்டாலும் அதன் அவசியத்தை உணர்ந்து பாடசாலை நேரத்தில் வாரத்தில் ஒருமுறை அல்லது இருமுறை பாடவேளையை ஒதுக்கி அதில் பிள்ளைகளை ஈடுபடச் செய்யலாம். அல்லது பாடசாலை முடிந்த பின்னர் இம் முயற்சிகளுக்கு ஆசிரியர் சேவையை பெறக் கூடிய வகையில் அவர்களது நேரசூசியை ஒழுங்குபடுத்துவதன் மூலம் இதனை நடைமுறைப்படுத்தலாம். எவ்வாறாயினும் இணைப்பாட விதானச் செயற்பாட்டினை கூடிய வினைத்திறனைத் தரும் வகையில் அமுல்படுத்துவது அதிபர், ஆசிரியர் போன்றோரின் ஆர்வம், அர்ப்பணிப்பு என்பவற்றிலேயே தங்கியுள்ளது.

**உசாத்துணை**


1. கினிகே,ஜ.எல். (2008) .புதிய கலைத்திட்ட நேக்கமும், பாடசாலைக் கல்வியில் எதிர்பார்க்கப்படும் மாற்றமும். மீப்பேசந்தி பாதுக்க: கல்வி வாண்மைத்தேர்ச்சி விருத்த மையம்.

2. கருணாநிதி மா.,2008, கற்றல் கற்பித்தல் மேம்பாட்டுக்கான வழிமுறைகள், சேமமடு பதிப்பகம்,

3. சத்தார் எம்.பிர்தௌஸ், 2009, நிலைமாற்று முகவர், அன்னை வெளியீட்டகம், 251ஏ பிரதான சாலை, மருதமுனை.

4. //www.researchgate.net/topic/Primary-Education